# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 111 | 4 Pages | 24.11.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 111 | 4 பக்கங்கள் | 24.11.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தை அறிவித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை, நவ.24

களத்தில் முதல்வர் திட்டத்தின் அடுத்த கட்டமாக, "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு அறி வித்துள்ளது.

மக்களிடம் செல் என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும்அவர், "ஒவ்வொரு மாவட்ட ஆட்சி யரும், இனி ஒவ்வொரு மாத மும், ஒருநாள் வட்ட அளவில் தங்கி ஆய்வில் ஈடுபட வேண் டும்.

அரசு அலுவல கங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளை கேட்டறிந்து, அரசின் நலத்திட்டங்கள், சேவைகள் தங்கு தடையின்றி மக்களிடம் சென்று அடைவதை உறுதி செய்ய வேண் டும்.

நானும், அரசு இயந்திரமும் களத் திற்கு வருகிறோம், குறைகளை கேட்டு, மக்களின் கவலையை போக்கி, மகத்தான தமிழ்நாட்டை உருவாக்குவோம்" என்றார்.

## சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை: முதல்வர் திறந்து வைக்கிறார்

சென்னை, நவ.24

சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் சமூக நீதி காவலர் வி.பி.சிங் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலை திறப்புவிழாவருகிறதிங்கட்கிழமை (27ந்தேதி) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாநிலக் கல்லூரி வளாகத்திற்கு சென்று வி.பி.சிங் சிலையை திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்மந்திரி அகிலேஷ் யாதவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். வி.பி.சிங் மனைவி சீதா குமாரி, வி.பி.சிங் மகன்கள் அஜயா சிங், அபய் சிங் ஆகியோரும் பங்கேற்கிறார்கள்.

தமிழகஅரசுசார்பில்நடைபெறும் இந்த சிலை திறப்பு விழா நிகழ்ச்சி முடிந்ததும் அதன் தொடர்ச்சியாக கலைவாணர்அரங்கில்தலைவர்கள் வாழ்த்தி பேசும் நிகழ்வுகள் நடைபெறுகிறது. இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டஅனைத்துதலைவர்களும் பங்கேற்று பேசுகிறார்கள். நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியினர், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம். எல்.ஏ.க்களும் கலந்து கொள்கின்றனர்.

## வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்க முறை திருத்தப் பணிகள்: திருப்பூர் கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.24

01.01.2024ம் நாளினை தகுதி ஏற் படுத்தும் நாளாகக் கொண்டு வாக்கா ளர்பட்டியலில் சிறப்பு சுருக்க முறை திருத்தப் பணிகள்; திருப்பூர் மாவட் டத்திற்குட்பட்ட எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் மேற்கொள்ளப் பட்டுவருகிறது. இதன் பகுதியாக 25.11.2023 (சனிக்கிழமை), 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் திருப்பூர் மாவட் டத்திற்குட்பட்ட எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள அனைத்து நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வாக் காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பாக சிறப்பு முகாம்; நடை பெற உள்ளது.

மேலும், நடைபெறவுள்ள சிறப்பு முகாம் நாட்களில்; ஜனவரி 1ம் தேதியன்று 18 வயது பூர்த்தியடையும் வாக்காளர்களும் மற்றும் அடுத்த ஆண்டு அதாவது 2024 ஆண்டின் ஏப்ரல் 1ம் தேதி, ஜீலை 1ம் தேதி, அக்டோபர் 1ம் தேதி 18 வயது பூர்த்தியடையும் வாக் காளர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான படிவம்6 யை பூர்த்தி செய்து முன்னதாகவே அளிக்கலாம்,

மேற்படி முன்னதாக வரப்பெற்ற படிவங்கள் (அடுத்தாண்டில் தகுதி நாள் அடையும்) சேகரிக்கப்பட்டு அவை அந்தந்த காலாண்டின் துவக் கத்தில் (ஏப்ரல், ஜீலை, அக்டோபர்) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க் கப்படும்.

சிறப்பு முகாம் நாளன்று, வாக்கா ளர் பட்டியலில் பெயர் இடம் பெறா தவர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்ய விரும்புவோர், பெயர் நீக்கம் செய்ய விரும்புவோர் மற்றும் ஒரே தொகு திக்குள் குடியிருப்பு மாறியவர்கள், முகவரி / புகைப்படம் மாற்றம் செய் வது போன்ற கோரிக்கைகள் தொடர் பாக, கீழ்க்கண்ட படிவங்களில் உரிய ஆவணங்களை இணைத்து வாக்குச்சாவடி மையங்களில் விண் ணப்பிக்கவும் பொதுமக்கள் கேட் டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க படிவம் 6 வெளி நாடுவாழ் வாக்காளரின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க படி வம் 6யு தன்விருப்பத்தின் அடிப்ப டையில் வாக்காளர் அடையாள அட் டையுடன் ஆதார் எண்ணினை இணைக்க படிவம் 6 டீ வாக் காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்ய படிவம் 7 ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி திருத்தம் செய்ய / ஒரு சட்டமன்ற தொகுதியி லிருந்து மற்றொரு சட்டமன்ற தொகுதிக்கு முகவரி மாற்றம் செய்ய மற்றும் வாக்காளர் பட்டியலில் உள்ள விபரங்களை / புகைப்படம் திருத்தம் செய்ய படிவம் 8 பொது மக்கள் nttps://voters.ecm.gov. என்ற இணையதளம் மூலமாகவும்>Voter Hebilne என்ற மொபைல் செயலி மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். எனமாவட்டகலெக்டர்கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

## வடகிழக்கு பருவமழை மற்றும் பலத்த காற்றில் இருந்து தோட்டக்கலை பயிர்களை பாதுகாப்பது குறித்த ஆலோசனைகளை மேற்கொள்ளபட வேண்டும்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.24

பசுமைக்குடிலின்அடிப்பாகத்தை பலமாக நிலத்துடன் இணைப்புக் கம் பிகளால் இணைக்க வேண்டும். பசுமைக்குடிலின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பத்திரமாக மூடி உள்ப குதியில் காற்று உட்புகாமல் பாது காக்கப்பட வேண்டும். அருகில் மரங்கள் இருப்பின் அதன் கிளை களை அகற்ற வேண்டும். பசுமைக் குடிலின் கட்டுமானத்தினுள் கிளிப் புகள்ஏதேனும்இருப்பின்அவற்றை மாற்ற வேண்டும்.

நிழல் வலைக்குடிலில் கிழிந்து போனநிழல்வலைகளைதைத்து சரி செய்ய வேண்டும். நிழல் வலைக்கு டிலின் அடிப்பாகம் பலமாக நிலத்து டன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.

மா, பலா, முந்திரி, கொய்யா, எலு மிச்சை போன்ற பல்லாண்டு பயிர்க ளில் காய்ந்த மற்றும் பட்டுப் போன கிளைகளை அகற்றிட வேண்டும். நல்ல காற்றோட்டம் அமையும் பொருட்டு கிளைகளை கவாத்து செய்ய வேண்டும். மரத்தின் அடிப் பகுதியில் மண் அணைத்து தண்டுப் பகுதியில் மண்ணை குவித்து வைத் தல் வேண்டும். தோட்டத்தில் தேவையான வடிகால் வசதி செய் திட வேண்டும். நோய்த்தடுப்பு மருந்துகள் தூர்ப் பகுதியில் நனை யும் படி தெளிக்க வேண்டும். இளம் செடிகள் காற்றினால் பாதிக்கா வண் ணம் தாங்கு குச்சிகள் கொண்டு கட்ட வேண்டும். கனமழை காற்று முடிந்தவுடன் மரங்களில் பாதிப்பு இருப்பின் உடனடியாக வேர் பகு தியை சுற்றி மண் அணைக்க வேண் டும். பாதிக்கப்பட்ட கிளைகளை அகற்ற வேண்டும். மரங்களுக்கு தேவையான தொழு உரம் இட வேண்டும். நோய் தடுப்புமுறை களை பின்பற்ற வேண்டும்.

வருடாந்திர பயிரான வாழை காற் றினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில்கீழ்மட்ட இலை களை அகற்றி விட்டு மரத் தின் அடியில் மண் அணைத் தல் வேண்டும். சவுக்கு அல்லது யுகலிப்டஸ் கம்பு களை ஊன்று கோலாக பயன்படுத்த வேண்டும். மரங்களை சுற்றிலும் சுத்தப் படுத்தி நல்ல வடிகால் வசதி அமைக்க வேண்டும். வாழைத்தார்களைமுறை யாகமூடிவைத்தல்வேண் டும். 75 சதவீதத்திற்கு மேல் முதிர்ந்ததார்களை அறு வடை செய்தல் வேண்டும்.

தோட்டக்கலைப் பயிர்க ளுக்கான வழிமுறைகளாக, தோட்டக்கலைப் பயிர்க ளான வாழை, மரவள்ளி, வெங்காயம், மிளகாய், தக் காளி மற்றும் கொத்தமல்லி போன்ற பயிர்களுக்கு உரிய காலத்தில் பயிர்காப்பீடு செய்ய வேண்டும். அனைத்து வயல் களிலும் அதிக நீர் தேங்கா வண்ணம் உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும். நீர்பாசனம் மற்றும் உர மிடுதல் ஆகியவற்றை தற்காலிக மாக நிறுத்தி வைக்க வேண்டும். காற்றினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க காற்று வீசும் திசைக்கு எதிர் திசையில் குச்சிகளால் முட்டுக் கொடுத்து புதியதாக நடவு செய்த செடிகள் சாயா வண்ணம் பாதுகாக்க வேண்டும். வயல்களில் தேவை யான பயிர்ப்பாதுகாப்பு நடவ டிக்கை மேற்கொள்ளப்பட வேண் டும்.

மேலும் விவரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்கு நர், தோட்டக்கலை அலுவலர் மற் றும் உதவி தோட்டக்கலை அலுவ லர்களை தொடர்பு கொள்ளலாம். என மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ் துராஜ் தெரிவித்துள்ளார்கள்.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் அவிநாசி வட்டம் துலுக்கமுத்தூர் ஊராட்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வளாகத்தில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## கடலில் இறங்கிய விமானத்தால் அமெரிக்காவில் பரபரப்பு



அமெரிக்கா, நவ.24

மேற்கு அமெரிக்காவில் உள்ள தீவுகள் நிறைந்த மாநிலம், ஹவாய். இதன் தலைநகரம் ஹோனோலுலு.

இங்குள்ள ஒவாஹு (Oahu) தீவுக்கு அருகே கெனோஹே (Kaneohe Bay) கடற்கரை பகுதியில் அமெரிக்க ராணுவத்தின் விமான படைக்கு சொந்தமான விமான தளம் ஒன்று உள்ளது. இந்த தளத்திற்கு வாஷிங்டன் மாநில விட்பி தீவில் இருந்து 9 பயணிகளுடன் போயிங் போஸிடான் 8ஏ (Boeing Poseidon 8A) ரக அமெரிக்க கண்காணிப்பு விமானம் ஒன்று சென்றது.

விமானதளத்தில்தரையிறங்க முற்பட்ட போது அது எதிர்பாராதவிதமாக ஓடுகளத்தை தாண்டி வேகமாக சென்று, பிறகு கடல்நீரில் இறங்கியது.


அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் உயிரிழப்பு ஏதுமில்லை. பயணிகள் அனைவரும் காயங்கள் ஏதுமின்றி கடலில் நீந்தி கரை சேர்ந்து உயிர் தப்பினர்.

கருமேகங்கள் மற்றும் மழையினால் ஓடுதளம் விமானிக்கு தெளிவாக தெரியவில்லை என்றும் இதனால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த விமானத்தில் இருந்து எரிபொருள் உள்ளிட்ட அபாயகரமான பொருட்கள் ஏதும் கடல் நீரில் கலந்து விடாமல் தடுக்கும் விதமாக கடல் நீரில் பலமான தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

ராணுவ உளவு வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் இந்த விமானம் சுமார் ரூ.2300 கோடி ($275 மில்லியன்) மதிப்புடையது.

## உலகின் ஒல்லியான ஓட்டல்



இந்தோனேஷியா, நவ்.24

உலகின் பல்வேறு நாடுகளிலும் பிரமாண்டமான ஓட்டல்கள், அதில் உள்ள வசதிகள்குறித்தவீடியோக்கள் இணையத்தில் பரவி வருகிறது.

இந்நிலையில் உலகின் ஒல்லியான ஓட்டல் என்று இந்தோனேஷியாவில் உள்ள ஒரு ஓட்டல் குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அரிஇந்திரா என் ப வ ர ா ல் வடிவமைக்கப்பட்ட இந்த கட்டிடம் 5 தளங்களை கொண்டுள்ளது. 9 அடி அகலத்துடன் 7 அறைகள் மட்டும் கொண்டுள்ள இந்த ஓட்டலில்ஒருஓய்வுஅறையும் உள்ளது. குறுகிய இடத்தின் காரணமாக கட்டிடத்தை வடிவமைப்பதில் சவாலை எதிர் கொண்டதாக கட்டிட வடிவமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கூறுகையில், வசதியாக வாழ்வதற்கும், நடமாடுவதற்கும் உண்மையில் எவ்வளவு சிறிய இடம் தேவை என்று விருந்தினர்கள் வியக்கும் வகையில் இந்த ஓட்டல் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

## கயிற்றில் நடந்தவாறு கத்திகளால் வித்தை காட்டி உலக சாதனை படைத்த சர்க்கஸ் கலைஞர்



அமெரிக்கா, நவ.24

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள போவே பகுதியை சேர்ந்தவர் எட்கர் யுட்கேவிச். சர்க்கஸ் கலைஞரான இவர் கயிற்றில் நடந்தவாறு 3 கத்திகளை பயன்படுத்தி நேர்த்தியாக வித்தை காட்டி கின்னஸ் உலக சாதனையில் இடம் பிடித்துள்ளார்.

இதுகுறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில், குறிப்பிட்ட தூரம் கட்டப்பட்ட கயிற்றின் மீது எட்கர் யுட்கேவிச் நடந்து செல்கிறார். அப்போது அவரது கையில் 3 கத்திகளை வைத்து அவற்றை வீசி வித்தை காட்டி பார்வையாளர்களை அசத்துகிறார்.

இவ்வாறு வித்தை காட்டியவாறே 34 அடி மற்றும் 4 அங்குல தூரத்தை கடந்து சாதனையை மேற்கொண்டுள்ளார்.

# நடப்பு கல்வி ஆண்டில் 64 கோடி அளவில் 1500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கடன்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.24


திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதியைச் சேர்ந்த கல்லுhரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்லுhரி படிப்பிற்கான கல்விக் கடன் பெற சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர்அலுவலகம் மற்றும் முன்னோடி வங்கி மூலம் 23112023 ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் திருப்பூர் மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து கல்விக் கடன் பெற முகாமில் பெற்றோர்களுடன் மாணவர்கள் பங்கேற்றனர். மேலும் இந்த முகாமில் கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, யூனியன் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாங்க் ஆப் பரோடா உள்ளிட்ட 22 வங்கிகள்கலந்து கொண்டனர்.

மொத்தமாக 300க்கு மேற்பட்ட மாணவர்கள் முகாமில் கலந்து கொண்டனர் திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு கல்வி ஆண்டில் 64 கோடி அளவில் 1500க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கப்பட்டடுள்ளது. மேலும், அரசின் மானியத்துடன் கூடிய கடன் திட்டங்களான தாட்கோ, மாவட்ட தொழில் மையத்தின் கடன் திட்டங்கள், பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வங்கிகள் அதனை பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வங்கிகளுக்கு சாலையோர வியாபாரிகளுக்கான விண்ணப்பங்களை விரைந்து பரீசிலனை செய்து கடன் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசின் காப்பீடு திட்டங்கள் குறித்தும் பிற வங்கி கடனுதவி மற்றும்சரியான முறையில் திருப்பி செலுத்துவதன் நன்மைகள் குறித்தும், வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் மீதான குறைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. முகாமில் பெறப்பட்ட அனைத்தும் விண்ணப்பங்களும் பரீசிலக்கப்பட்டு விரைந்து கல்விக் கடன் வழங்கப்படும்....

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், மாவட்ட முன்னோடி வங்கி அலுவலர் வீ.ரவி மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அடுக்குமாடி குடியிருப்பு ஆவண பதிவு புதிய நடைமுறை விரைவில் அமல்



சென்னை, நவ.24

தமிழகத்தில், கட்டடம் மற்றும் அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் ஒரே விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யும் நடைமுறை வரும் டிசம்பர் 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுக்குமாடி குடியிருப்புகளைப் பதியும்போது இனி பிரிபடாத பாக நிலத்திற்கு ஒரு தனி ஆவணம் கட்டடத்திற்கு ஒரு தனி ஆவணம் என இரு ஆவணங்களாகப் பதியப்படும் நிலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ரூ.50 லட்சம் வரை உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையை தற்போதுள்ள 7 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரூ.50 லட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையை 7 சதவீதத்தில் இருந்து 5 சதவீதம் ஆக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரூ.20 லட்சம் வரையிலான புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் விற்பனை கிரைய ஆவணம் பதிய முத்திரைத் தீர்வை 4 சதவீதம், பதவுக் கட்டணம் 2 சதவீதம் செலுத்தி'னால் போதும்.

# வருகிற பாராளுமன்ற தேர்தலில் கடந்த தேர்தலை காட்டிலும் கூடுதல் இடங்கள் கேட்போம்: கே.எஸ்.அழகிரி

திருப்பூர், நவ.24

காங்கிரஸ்கட்சியின்தமிழகதலைவர்கே.எஸ்.அழகிரி இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருப்பூர் வந்தார். அப்போது நிருபர்களிடம் கூறியதாவது:

மத்திய அரசின் தவறான நடவடிக்கையால் திருப்பூர் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. வங்கதேசத்தில் இருந்து 4000 கோடி துணி வந்தடைந்திருக்கிறது.

12.6 சதவீதம் காங்கிரஸ் ஆட்சியில் வரி விதிக்கப்பட்டது. அதனால் வங்கதேச துணிகள் வரவில்லை. ஆனால் பா.ஜ.க. வரி விதிக்காததால் வங்கதேச துணிகள் வருகின்றன. மத்திய அரசு இதனை சரி செய்ய வேண்டும். சீனாவில் இருந்து வருகிற பாலிஸ்டராலும் பிரச்சனை. பாலிஸ்டர் இங்கு அதிகளவில் கிடைப்பதில்லை. அதனை உற்பத்தி செய்பவர்கள் அதானி அம்பானி, வேறு யாருக்கும் உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லை. இதனால் பாலிஸ்டரால் வியாபாரிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனையும் சரி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, நெசவு தொழிலை அதிக மானோர் சார்ந்துள்ளனர். மத்திய அரசின் தவறான கொள்கையால் அவர்கள் பாதிப்படைந்துள்ளனர். கோவில் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இந்து சமய அறநிலையத் துறை சுதந்திரத்திற்கு முன்பிருந்தே அரசு கையில் தான் உள்ளது. மன்னர் காலத்திலும் மன்னர் கையில் தான் கோவில்கள் இருந்தன.

கோவில்கள் அரசுக்கட்டுப்பாட்டில் இருப்பது தான் சிறந்தது. சேகர்பாபு சைவ பழம் போல் தெரிகிறார். 5000 கோடிக்கு மேல் கோவில் சொத்துக்களை திரும்ப பெற்றுள்ளார். இதற்குநிர்மலாசீதாராமன் பாராட்ட வேண்டாமா?

தமிழக கவர்னருக்கு மாலைக்கண் நோய். அதனால்தான் தமிழகத்தில் தீண்டாமை என தெரிவிக்கிறார். சட்டமன்றத்தின் மூலம் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டுமா உச்சநீதிமன்றம் சென்று தான் நிறைவேற்ற வேண்டுமா என்பதைத்தான் நாங்களும் கேட்கிறோம்.

தமிழக முதல்வர் சில நடவடிக்கைகள் தவறாக நடந்தால் திரும்ப பெறுகிறார். திருவண்ணாமலை விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்டம் திரும்ப பெறப்பட்டது .

காவிரியை வைத்து கர்நாடகா பா.ஜ.க., தமிழக பா.ஜ.க. அரசியல் செய்கிறார்கள். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறிய கருத்து தொடர்பாக அவரிடம் பேசி சரி செய்வோம். பா.ஜ.க. அல்லாத எதிர்க்கட்சி மாநிலங்களில் மட்டும் சோதனைகள் நடந்தால் அரசியல் காரணமே தவிர வேறு இல்லை. வருகிற பாராளுமன்ற தேர்தலில் கடந்த தேர்தலை காட்டிலும் கூடுதல் இடங்கள் கேட்போம்.

சமீபத்தில் நடந்த கிரிக்கெட் இறுதிப்போட்டிக்கு நடிகர், நடிகைகளை அழைத்தவர்கள் உலகக் கோப்பை வென்றவர்களை அழைக்கவில்லை.

அந்த ஸ்டேடியம் சர்தார் வல்லபாய் படேல் பெயர் இருந்தது அதனை மோடி தன் பெயருக்கு மாற்றி கொண்டார்.

நில அபகரிப்பு போல் ஸ்டேடியம் அபகரிப்பு இருக்கிறது. அமலாக்கத் துறை மணல் அள்ளும் விஷயத்தில் எந்த மாநிலத்திற்கு சென்று சோதனை செய்தது. தமிழகத்தில் மட்டும் அமலாக்கத்துறை முனைப்பு காட்டுவதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. அமலாக்கத்துறை பண பரிமாற்றத்தில் தான் கவனம் செலுத்த வேண்டும். மணல் பரிமாற்றத்தில் அல்ல. அமித்ஷா மகன் சொத்து மதிப்பு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஏன் அந்த பக்கம் செல்வதில்லை. அமலாக்கத் துறை மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. ஒருவர் மட்டும் விடுதலை செய்யப்படவில்லை என்றால் அவர் மீது தனிப்பட்ட வழக்கு ஏதேனும் நிலுவையில் இருக்க வாய்ப்பு உண்டு. 5 மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றி பெறும். தமிழகத்தில் அமோகமாக வெற்றி பெறும்.

கவர்னர் வேண்டாம் என்றோ அதிகாரத்தை குறைக்க வேண்டும் என்பதோ காங்கிரஸ் கருத்தல்ல. மரபை மீறக்கூடாது என்று தான் சொல்கிறோம். இழுக்கு ஆர்.என். ரவிக்கு அல்ல தமிழ்நாடு கவர்னருக்கு தான். காங்கிரஸ் கட்சியில் பிரதமர் வேட்பாளர் அறிவிப்பது இல்லை. கட்சியின் ஆலோசனை கூட்டத்தில் தான் பிரதமர் குறித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

# திருவண்ணாமலையில் தேரோட்டத்தின்போது பரபரப்பு– மின்சாரம் பாய்ந்து பக்தர்கள் காயம்



திருவண்ணாமலை, நவ.24

திருவண்ணாமலையில் மகா ரதம் என்று அழைக்கப்படும் அண்ணாமலையார் திருத்தேர் மாட வீதி உலா நடைபெற்று வருகிறது.

தேரோட்டாத்தை காண ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலையை சூழ்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்துச் செல்கின்றனர்.

இந்நிலையில், தேரோட்டத்தின்போது மின்சாரம் பாய்ந்து பக்தர்கள் சிலர் காயம் அடைந்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. குறைவான மின்சாரம் பாய்ந்ததால் பக்தர்கள் சிலர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர்.

கூட்டத்தில் ஒரு பகுதியில் இருந்த பக்தர்கள் மீது மாட வீதியில் இருந்த கடை ஒன்றில் இருந்து மின்சாரம் பாய்ந்துள்ளது.

இதை அறிந்த காவல்துறையினர் மின்சாரம் நிறுத்தப்பட்டு பக்தர்களை மீட்டனர்.

# தரைப்பாலம் மூழ்கியதால் போக்குவரத்து பாதிப்பு புதிதாக பாலம் கட்ட கோரிக்கை

நெல்லை, நவ.24

நெல்லை, தென்காசி, தூத்துக்குடி ஆகிய 3 மாவட்டங்களின் எல்லை பகுதிகளாக அமைந்துள்ள மூவிருந்தாளி, சுண்டங்குறிச்சி, பன்னீர் ஊத்து மற்றும் தென்காசி நெல்லை மாவட்ட எல்லை பகுதியான தேவர்குளம் பகுதியில் அமைந்துள்ள மேல இலந்தைகுளம் மற்றும் அதன் பகுதிகளில் நேற்று இரவு முழுவதும் பெய்த கனமழையின் காரணமாக ஏராளமான குளங்கள் நிரம்பின.

தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதன் ஒரு பகுதியாக தேவர்குளத்தை அடுத்த மேல இலந்தைகுளம் பகுதியில் குளத்தில் உடைப்பு ஏற்பட்டு தரைப்பாலங்கள் மூழ்கின.

சங்கரன்கோவில், நெல்லை நெடுஞ்சாலையை இணைக்கும் வகையில் அமைந்துள்ள இந்த தரை பாலத்தை மூழ்கடித்தபடி வெள்ளம் செல்வதால் போக்குவரத்து பாதிக்க ப்பட்டு, பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து சம்பவஇடத்தைநெல்லை ஆர்.டி.ஓ. ஷேக் அய்யூப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தற்போது இந்த வெள்ளத்தின் நடுவே டிராக்டர் மூலமாக பொதுமக்கள் கரையின் இருபுறத்திற்கும் சென்று வருகின்றனர். லாரி, வேன் உள்ளிட்ட கனரக வாகனங்கள் மட்டுமே தற்போது இந்த வழியாக செல்ல முடிகிறது.

இந்த பகுதியில் சுமார் 60க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் இருக்கும் நிலையில் நேற்று நள்ளிரவு 12.30 மணி முதல் கடுமையான வெள்ளப்பெருக்கு இருந்து வருவதாகவும், சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த தரைப்பாலம் மூழ்கும் அளவுக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும், புதிதாக பாலம் கட்டுவதற்காக பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் கூறினர்.

# பிரிட்ஜில் மின்கசிவு: வீடு தீப்பிடித்து எரிந்ததில் மூதாட்டி, பேரன் உயிர் தப்பினர்

தாம்பரம், நவ.24

தாம்பரம்அடுத்தசேலையூர் ஸ்ரீராம் நகரை சேர்ந்தவர் அல்லி(60). இவர் நேற்று இரவு தனது பேரன் அஸ்வினுடன் வீட்டில் தூங்கினார். இன்று அதிகாலை அஸ்வின் எழுந்தபோது வீடு முழுவதும் புகைமூட்டமாக காணப்பட்டது. மேலும் சமையல் அறையில் இருந்த பொருட்கள் அனைத்தும் பற்றி எரிந்தன. இதையடுத்து அஸ்வினும், அல்லியும் உடனடியாக வீட்டை விட்டு வெளியே வந்தனர்.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள்விரைந்து வந்து தீயை அணைத்தனர். பிரிட்ஜில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக இந்த தீவிபத்து ஏற்பட்டதாக தெரிகிறது.

வீட்டில் தீப்பற்றியதும் அல்லியும், அவரது பேரன் அஸ்வினும் வெளியே வந்ததால் உயிர்தப்பினர். இது குறித்து சேலையூர் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# நீலகிரிக்கு வராதீங்க... சுற்றுலா பயணிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள்




நீலகிரி, நவ.24

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக கோவை, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வந்தது.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று இரவு திடீரென கன மழை பெய்யத் தொடங்கியது. இரவு விடிய, விடிய மழை பெய்தது. குன்னூர், கோத்தகிரி பகுதியில் மழை வெளுத்து வாங்கியது. ரோட்டில்காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் 10க்கும் மேற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. நடு ரோட்டில் மரங்களும் முறிந்து விழுந்தன.

இதன் காரணமாக குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் போக்குவரத்து தடைபட்டது. சாலையின் இருபுறமும் பல மணி நேரம் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றன.

அந்த சாலையில் அரசு போக்குவரத்து கழக பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பஸ் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக பயணிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்கள் மாற்று வாகனங்கள் மூலம் ஊருக்குசென்றனர். அதிகபட்சமாக கீழ் கோத்தகிரியில் 24.1 செ.மீ. மழை பதிவாகி இருந்தது. தொடர் மழையால் நீலகிரி மாவட்ட பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

இந்நிலையில் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் குன்னூர் பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் நீலகிரிக்கு வருவதை தவிர்க்குமாறு சுற்றுலா பயணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அருணா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேட்டுப்பாளையம் கோத்தகிரி, மேட்டுப்பாளையம் குன்னூர் மலைப் பாதைகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த பாதையை பொது மக்கள் இன்று பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். கோவையில் இருந்து 2 தமிழக பேரிடர் மீட்பு படை வர உள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# மாங்காடு அருகே மோட்டார் சைக்கிளை சுத்தம் செய்தபோது வாலிபர் பலி

பூந்தமல்லி, நவ.24

பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம் பகுதியை சேர்ந்தவர் கார்த்திக்(32), மெக்கானிக்கான இவர் மாங்காடு அடுத்த கொளப்பாக்கம் பகுதியில் இருசக்கர வாகனங்கள் பழுது பார்ப்பது மற்றும் வாட்டர் வாஷ் செய்யும் கடை நடத்தி வந்தார்.

இந்த நிலையில் கார்த்திக் மோட்டார் சைக்கிளை வாட்டர் வாஷ் செய்தபோது திடீரென மின்சாரம் தாக்கியது.

இதையடுத்து அவர் அந்த எந்திரத்தை கீழே வீசினார்.

இதில் தண்ணீரின் வேகத்தில் அந்த எந்திரத்தின் முன்பகுதி கார்த்திக்கின் மார்பில் வேகமாக மோதியது.

இதில் மயங்கி விழுந்த அவரை மீட்டு அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

பரிசோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே கார்த்திக் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.



கலெக்டர் கிறிஸ்துராஜிடம் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலக்த்தில் செஞ்சுசிலுவை சங்கத்தின் பல்லடம் அரசு மருத்துவமனை பயன்பாட்டிற்காக இரண்டு வெண்டிலேட்டர்களை வழங்கினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# ராணுவ வீரர்கள் தேர்வு அறிவிப்பாணையை ரத்து செய்ய கோரிய வழக்கு தள்ளுபடி: மதுரை ஐகோர்ட் உத்தரவு

மதுரை, நவ.24

நெல்லை மாவட்டதை சேர்ந்த முத்துகிருஷ்ணன் மற்றும் சிலர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

கடந்த 2018ம் ஆண்டில் ராணுவ வீரர்கள் தேர்வில் பங்கேற்றோம். உடல் தகுதி தேர்வு மற்றும் எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றோம். இந்த தேர்வின் முடிவில் ராணுவ வீரர்கள் பணியிடங்களுக்கு தேர்வானவர்களின் பட்டியலில் எங்கள் பெயர் இடம் பெறவில்லை.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரித்தபோது, 22 பணியிடங்களுக்கு மட்டுமே தகுதியானவர்கள் தேர்வாகியுள்ளனர் என்றார்.

ஆனால் ராணுவம் வெளியிட்ட அறிவிப்பாணையில் இந்த பதவிக்கு எத்தனை பேர் தேவை, எத்தனை பேரை தேர்வு செய்ய இருக்கிறார்கள் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை.

இது சட்ட விரோதமானதாகும். எனவே இந்த அறிவிப்பாணையை ரத்து செய்துவிட்டு, விதிகளை பின்பற்றி முறையாக அறிவிப்பாணை வெளியிட்டு ராணுவ வீரர்களை தேர்வு செய்ய உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர்.

இந்த வழக்கில் மத்திய பாதுகாப்புத்துறை செயலாளர், முதன்மை ராணுவ அதிகாரி உள்ளிட்டோர் ஏற்கனவே தங்களது தரப்பு பதிலை ஐகோர்ட்டில் தெரிவித்து இருந்தனர்.

இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, மனுதாரர்களின் கோரிக்கை ஏற்புடையதல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என உத்தரவிட்டார்.

## மது விற்பனையை அதிகப்படுத்த வேண்டும் என்பது அரசின் எண்ணம் இல்லை: அமைச்சர் முத்துசாமி

ஈரோடு, நவ.24

கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழ் தேர் ஊர்தி வாகனம் தமிழகம் முழுவதும் வருகிறது. அதன்படி இன்று ஈரோடு கருங்கல்பாளையம் பகுதியில் முத்தமிழ் தேர் வாகனம் வந்தது. இதனை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். பின்னர் அமைச்சர் முத்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழக அமைச்சர்கள் வீடுகளில் அமலாக்கத் துறை சோதனை செய்வது என்பது அவர்களது வேலை. அதில் எந்த பிரச்சனையும் இல்லை என அமைச்சர் ஏ.வ வேலுவே தெரிவித்துள்ளார். இதனால் மக்களுக்கு செய்யும் பணி தடைப்படாது.

தீபாவளி பண்டிகை காலகட்டத்தில் மது மட்டுமல்ல அனைத்தும் கூடுதலாக வியாபாரம் ஆகிறது. இதை திட்டமிட்டு செய்யவில்லை. தானாக நடக்கிறது. இதை தடுப்பது கடினம். இதற்கு எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை. இதை தடுத்திட வேண்டும்என்றுநினைக்க முடியாது. அந்த காலகட்டத்தில் அவர்களது சந்தோஷத்திற்காக குடிக்கிறார்கள்.

மது பழக்கத்தை தவிர்க்கவும், குறைக்க வேண்டும் என அரசின் சார்பில் பொதுமக்களுக்கு வேண்டுகோள் வைக்கிறோம். மதுவிற்பனையை அதிகப்படுத்த வேண்டும் என்பது அரசின் எண்ணம் கிடையாது.

இந்த பழக்கத்தில் இருந்து வெளியே வருவதற்கு தேவையான நடவடிக்கையை செய்து வருகிறோம். டெட்ரா பாக்கெட் பற்றி ஆய்வறிக்கை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும். மது பழக்கத்தை ஒரே நாளில் மாற்றிவிடமுடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

பொங்கலுக்கு மதுக்கடை குறைப்பது குறித்து அறிவிப்பு இருக்குமா என்ற கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் முத்துசாமி, பொங்கலுக்கு பொங்கல் கொடுப்பீர்களா என்று கேட்டால் நன்றாக இருக்கும். மது கடைகள் குறைப்பது குறித்து சொல்லமுடியாது என்றார்.

## ராணுவ வீரர்கள் தேர்வு அறிவிப்பாணையை ரத்து செய்ய கோரிய வழக்கு தள்ளுபடி: மதுரை ஐகோர்ட் உத்தரவு

பாப்பிரெட்டிப்பட்டி, நவ.24

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள பட்டுக்கோணம்பட்டி பகுதியை சார்ந்தவர் மாரி (வயது 67) இவரது மனைவி வெள்ளையம்மாள் (62) இந்த வயதான தம்பதியினர் மலைவாழ் இனத்தை சார்ந்தவர்கள்எழுதபடிக்க தெரியாதவர்கள்.

இந்த தம்பதியினருக்கு அந்த பகுதியில் சொந்தமாக சிறிய அளவில் விவசாய நிலம் உள்ளது. அதில் விவசாயம் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து வருகின்றனர். இவர்களது மகள் திருமணம் ஆகி சென்று விட்டார்.

இந்த நிலையில் இந்த தம்பதியினர் கடந்த 40 ஆண்டுகளாக ரேஷன் அட்டை இல்லாததால்



அரசுமூலமாககிடைக்கும் ரேஷன் பொருட்கள், அரசின்நலதிட்டங்கள்போன்றவற்றை பெற முடியாமல் அவதியுற்று மனவேதனையில் வாழ்ந்து வருகின்றனர். இந்த தம்பதியினர் கடந்த 15 ஆண்டுகளாக ரேஷன்அட்டை வாங்குவதற்காக தருமபுரி மாவட்ட கலெக்டர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் போன்ற இடங்களுக்கு பல முறை அலைந்தும் ரேஷன் அட்டை பெற முடியவில்லை. அதிகாரிகள் அலட்சியம் காட்டி அவர்களை அலைகழித்து உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இவர்கள் ஆவாரம்காட்டூர் பகுதியில் வீடு கட்டி வாழ்ந்து வருவதற்கான வீட்டு வரி ரசீதும் ஊராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. அதே போல மாரிக்கும் அவரது மனைவிக்கும் ஆதார் கார்டு வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறியதாவது:

ஆதார் அட்டை, வீட்டு வரி ரசீது போன்றவை இருந்தும் அதிகாரிகளின் அலட்சியத்தால் இந்த வயதான தம்பதியினருக்கு இன்னமும் ரேஷன் அட்டை கிடைக்கவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது. இந்த நவீன காலத்தில் இது போன்ற புறக்கணிப்புகள் தொடர்வது நல்லதல்ல.

இது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்தி அவர்களுக்கு ரேஷன் அட்டை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது: மாமல்லபுரம் பேரூராட்சி நகராட்சியாக மாறுகிறது

மாமல்லபுரம், நவ.24

மாமல்லபுரம் பேரூராட்சி 15வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை பேரூராட்சியாக உள்ளது. இங்குள்ள மாமல்லபுரம், வெண்புருஷம், பூஞ்சேரி, தேவநேரி, பவழக்காரன் சத்திரம் பகுதிகளில் 20ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகிறார்கள்.

சர்வதேச சுற்றுலா பகுதியின் முக்கியத்துவம் கருதி தமிழகநகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாமல்லபுரத்தை நகராட்சியாக மாற்ற முடிவெடுத்து உள்ளது. அதற்கான பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை செய்துவருகிறது.



இந்நிலையில் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற, பேரூராட்சி ஒப்புதல் தேவை. இதற்கான அவசர கூட்டம் நேற்று மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் தலைவர் வளர்மதி எஸ்வந்தராவ், துணைத் தலைவர் ராகவன், செயல் அலுவலர் கணேஷ், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டு அதற்கானதீர்மானம்நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் வழங்கினர். மாமல்லபுரம் பேரூராட்சி, நகராட்சியாக மாறுவதால் பொதுசுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, துப்புரவு, கழிவுநீர் அகற்றல், கழிப்பறை வசதி, குடிநீர் வழங்கல், கழிவுநீர் வெளியேற்றல், தெரு விளக்கு, சாலை வசதி, சாலை அமைத்தல், உள்ளிட்ட கூடுதல் வசதிகள் மாமல்லபுரம் பகுதி மக்களுக்கு கிடைக்கும் என நகராட்சி நிர்வாகத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் மாமல்லபுரம் பகுதி மக்கள்மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## ராணுவ வீரர்கள் தேர்வு அறிவிப்பாணையை ரத்து செய்ய கோரிய வழக்கு தள்ளுபடி: மதுரை ஐகோர்ட் உத்தரவு

தருமபுரி, நவ.24

தருமபுரி நகராட்சி அலுவலகம் அருகே கந்தசாமி வாத்தியார் தெருவில் உள்ள ஒரு டீக்கடையில் விற்பனை செய்த மெதுவடையை சண்முகம் என்பவர் வாங்கி சாப்பிட வடையை பிரித்த போது அதில் இறந்த நிலையில் பல்லி ஒன்று இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.



அதனையடுத்து கடை உரிமையாளரிடம் காண்பித்து வாக்குவாதத்தில் ஈடுபடும் வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

இதுகுறித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கடை உரிமையாளரிடம் நேரடி விசாரணை நடத்தினர். மேலும் அந்த கடை சுகாதாரமற்ற முறையில் இருந்ததால் கடை உரிமையாளருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து கடையை சுகாதாரமாக வைக்க அறிவுறுத்தியதோடு மீண்டும் தாங்கள் சோதனைக்கு வரும் போதுசுகாதாரமற்றமுறையில் இருந்தால் கடையை சீல் வைக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்தனர். இச்சம்பவம் தருமபுரி நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுத்தியது.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில்:

தருமபுரி நகரில் சாலையோர கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவுகள் மற்றும் பலகாரங்கள் விற்கப்படுகின்றன. மேலும் அசைவ உணவகங்களில் தரமான இறைச்சிகள் மூலமாக உணவுகள் தயாரித்து விற்கப்படுகிறதா என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் வடையில் பல்லி இருக்கும் அவலங்கள் நடக்காது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பெண்கள் பள்ளி கழிவறைக்குள் பதுங்கிய வாலிபரால் பரபரப்பு

குள்ளனம்பட்டி, நவ.24

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி நகரின் மையப் பகுதியில் இருந்து வருகிறது. இப்பள்ளியில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த சுமார் 1500 மேற்பட்ட மாணவிகள் பயின்று வருகின்றன. இந்நிலையில் நேற்று வாலிபர் ஒருவர் பள்ளி கழிவறையில் பதுங்கி இருந்துள்ளார்.

இதைப் பார்த்த கழிவறைக்கு சென்ற மாணவிகள் கூச்சலிட்டவாறு பதட்டத்துடன் சென்று இதுகுறித்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களிடம் தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து உடனடியாகஅங்கு சென்ற தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பார்த்த போது வாலிபர் ஒருவர் கழிவறைக்குள் கதவை சாத்திக் கொண்டு திறக்காமல் இருந்துள்ளார்.

இதையடுத்து அருகில் இருந்த தீயணைப்புத்துறை வீரர்களை வரவழைத்து கழிவறையின் கதவை உடைத்து உள்ளே பதுக்கி இருந்த வாலிபரை பிடித்து நத்தம் போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்க முனியசாமி, சப் இன்ஸ்பெக்டர் விஜய பாண்டியன் ஆகியோர் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் நத்தம் காமராஜர் நகரைச் சேர்ந்த சின்னவர் மகன் பெரியசாமி (வயது 24) என்பது தெரியவந்தது.

மேலும் வாலிபர் எதற்காக கழிவறைக்கு சென்றார்? வேறு குற்ற வழக்குகளில் ஏதும்



தொடர்புடையவரா என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 83 மூட்டை பீடி இலைகள் பறிமுதல்: 2 பேரிடம் விசாரணை

தூத்துக்குடி, நவ.24

தூத்துக்குடி பீச் ரோடு வழியாக பீடி இலைகள் இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதாக தூத்துக்குடி நகர தனிப்படை போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து அப்பகுதியில் இன்று அதிகாலை தனிப்படை போலீசார் மாணிக்கராஜ், திருமணிராஜ், செந்தில், முத்துப்பாண்டி, மகாலிங்கம் மற்றும் போலீசார் தீவிர சோதனை நடத்தினர். அப்போது ரோஜ் பூங்காஅருகே படகுகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் 2 லோடு ஆட்டோக்களை நிறுத்தி மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்ததை கண்டுபிடித்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு சென்றுஅதனைசோதனை செய்தபோது அதில் ரூ.2 லட்சம் மதிப்பிலான 83 மூட்டைகளில் 4,150 கிலோ பீடி இலைகள் இருப்பது தெரியவந்தது. மேலும் அதை படகுகள் மூலம் இலங்கைக்கு கடத்தப்பட இருப்பதும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து அவற்றை பறிமுதல் செய்த போலீசார் லோடு ஆட்டோக்களை ஓட்டி வந்த நெல்லைமாவட்டம் கூத்தன்குழியைச் சேர்ந்த தினேஷ் (30), எடிசன் (20) ஆகிய இருவரையும் பிடித்து விசாரித்தனர். பின்னர் 2 பேரையும் தென்பாகம் போலீஸ்நிலையத்தில் ஒப்படைத்து அதில் தொடர்புடையவர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோவை, நீலகிரியில் கனமழை: 10 இடங்களில் மண் சரிவு மரங்கள் முறிந்ததால் போக்குவரத்து பாதிப்பு

கோவை, நவ.24

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக கோவை, நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வந்தது.



நீலகிரி மாவட்டத்தில் நேற்று இரவு திடீரென கன மழை பெய்யத் தொடங்கியது. இரவு விடிய, விடிய மழை பெய்தது. குன்னூர், கோத்தகிரி பகுதியில் மழை வெளுத்து வாங்கியது. ரோட்டில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் 10க்கும் மேற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. நடுரோட்டில் மரங்களும் முறிந்து விழுந்தன.

இதன் காரணமாக குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் போக்குவரத்து தடைபட்டது. சாலையின் இருபுறமும் பல மணி நேரம் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றன.

அந்த சாலையில் அரசு போக்குவரத்து கழக பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த பஸ் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக பயணிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. அவர்கள் மாற்று வாகனங்கள் மூலம் ஊருக்கு சென்றனர். அதிகபட்சமாக கீழ் கோத்தகிரியில் 24.1 செ.மீ. மழை பதிவாகி இருந்தது. தொடர் மழையால் நீலகிரி மாவட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், காரமடை பகுதியில் நேற்று இரவு விடிய, விடிய கனமழை பெய்தது. அங்கு அதிகபட்சமாக மேட்டுப்பாளையத்தில் 37.3 சென்டி மீட்டர் மழை பதிவானது. மழை காரணமாக காரமடை ஒன்றியத்தில் உள்ள மேட்டுப்பாளையம் உள்பட 193 பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டது.

சிக்காரம்பாளையம் கண்ணார்பாளையம், கருப்பராயன் நகர், பெள்ளாதி, சென்னம்பாளையம், பட்டக்காரனூர், ஏழுஎருமை பள்ளம் ஆகிய தடுப்பணைகள் நிரம்பி காட்டாற்று வெள்ளம் போல் கிராம சாலைகளை மூழ்கடித்து தண்ணீர் செல்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

கோவை குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. மேட்டுப்பாளையம் ஊட்டி மலை ரெயில் பாதையில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் வருகிற 25ந் தேதி மலை ரெயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டு இருக்கிறது.

## வருகிற பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும்: கிருஷ்ணகிரியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

கிருஷ்ணகிரி, நவ.24

கிருஷ்ணகிரி நகர தி.மு.க. சார்பில், நகர செயலாளர் நவாப்நகராட்சி தலைவர் பரிதா நவாப் ஆகியோருக்கு சொந்தமான இடத்தில் ராயக்கோட்டை மேம்பாலம் அருகில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு 8 அடி உயர வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று மாலை நடந்தது.



விழாவிற்கு தி.மு.க. பொதுச்செயலாளரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமை தாங்கினார். அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.காந்தி, அர.சக்கரபாணி, சிவசங்கர், கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிருஷ்ணகிரி நகர தி.மு.க. செயலாளர் நவாப் வரவேற்று பேசினார். விழாவில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் உருவ சிலையை திறந்து வைத்தார்.

விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

தமிழகத்தில் ஈரோட்டில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சிலை அமைக்கப்பட்டு, தொடர்ந்து பல இடங்களில் கலைஞர் சிலை அமைக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரியில் இன்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சிலை திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனால் அவரால் வர முடியவில்லை.

இருப்பினும் அவர், கருணாநிதி சிலை திறப்பு நிகழ்ச்சியை நினைத்து கொண்டே இருப்பார். கருணாநிதியுடன் நீண்டகாலம் பயணித்த அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கருணாநிதி சிலையை திறப்பதில் பெருமை கொள்கிறேன்.

இந்தசிலையைஎன்னை திறந்து வைப்பதற்கு வாய்ப்பு தந்த கழக நிர்வாகிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இதே கிருஷ்ணகிரி நகருக்கு இளைஞர் அணி கூட்டம், தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக வருகை தந்தேன்.

இன்று மீண்டும் உங்கள் அனைவரையும் கலைஞரின் சிலையை திறந்து வைக்கும் இந்த நிகழ்ச்சியில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தலைவர் கலைஞர் தனது வாழ்நாள் முழுவதும் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தி வெற்றியை கண்டவர். இந்த நன்னாளில் கலைஞரின் புகழை போற்றுவோம். வருகிற பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெறும். நமது தலைவர்காட்டுபவர்தான் பிரதமர் ஆக உள்ளார். கலைஞரின் புகழ் ஓங்குக. இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் அமைச்சர் துரைமுருகன் பேசியதாவது:

சிங்கமாக வீர நடை போட்டவர் கருணாநிதி. அவருடன், 83 ஆண்டுகள் பயணித்தவன் நான். கோபாலபுரத்திலிருந்து மூன்றாவது தலைமுறையாக விசுவாசியாக இருந்த நான் தூக்கி வளர்த்த உதயநிதியின் வளர்ச்சியை, வேகத்தை பாராட்டுகிறேன். அவருடைய பண்பாடு, அடக்கம் வாழ்த்துக்குரியது.

இவ்வாறு அவர் பேசினார்.

## மக்களுக்கு தேவையான மசோதாக்களை கவர்னர் நிறைவேற்ற வேண்டும்: ஜி.கே.வாசன்

திருச்சி, நவ.24

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் திருச்சியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை விரிவாக்கத்திற்காக அரசை எதிர்த்து போராடிய விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்ட வழக்குகளை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். மேட்டூர் பாசனம் மூலம் சம்பா சாகுபடி பொய்த்து போன நிலையில் அந்த பகுதிகளை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும்.

நடைபெற இருக்கிற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தேர்தல் கூட்டணி குறித்து சரியான வியூகத்தை அமைக்கும். சமூக விரோதிகளை தமிழக அரசு இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காமல் உள்ளார். மக்களுக்கு தேவையான மசோதாக்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும். அரசு பஸ்ஸில் படிக்கட்டில் பயணம் செய்த மாணவன் தவறி விழுந்து தனது கால்களை இழந்த சம்பவம் வருத்தம் அளிக்கிறது. எனவே அனைத்து அரசு பஸ்களிலும் கதவு அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 24.11.2023



# நீ உங்க அப்பா மேல வச்சிருக்கிறது பாசம் இல்ல வியாதி அனிமல் டிரைலர்

பாலிவுட்டின் பிரபல நடிகரான ரன்பீர் கபூர் தற்போது 'அர்ஜுன் ரெட்டி', 'கபீர் சிங்' போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் 'அனிமல்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா நடித்துள்ளார். இந்த படத்தில் அனில் கபூர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

பூஷன் குமார் மற்றும் பிரணவ் ரெட்டி வங்கா இணைந்து டி சீரிஸ் மற்றும் பத்ரகாளி பிக்சர்ஸ் மூலம் இப்படத்தை தயாரித்துள்ளனர். இப்படம் வருகிற டிசம்பர் 1ஆம் தேதி இந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. அதிரடி ஆக்ஷன் காட்சிகளுடன் உருவாகியுள்ள இந்த டிரைலரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். 'அனிமல்' திரைப்படத்திற்கு தணிக்கைக் குழு 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது. மேலும், இப்படத்தின் ரன்னிங் டைம் 3 மணி நேரம் 21 நிமிடம் 23 நொடி ஆகும்.



# சர்வதேச இசையமைப்பாளராகும் கதீஜா ரகுமான்

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் மகள் கதீஜா ரகுமான். இவர் ஷங்கர் இயக்கத்தில் 2010ஆம் ஆண்டு வெளியான 'எந்திரன்' படத்தில் இடம்பெற்ற 'புதிய மனிதா' என்ற பாடலில் ஒரு சிறிய பகுதியை பாடியிருந்தார். மேலும், சமீபத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன் 2' படத்தில் இடம்பெற்ற 'சின்னஞ்சிறு நிலவே' பாடலையும் கதீஜா பாடியுள்ளார்.

இதையடுத்து ஹலிதா ஷமீம் இயக்கி வரும் 'மின்மினி' படத்தில் இசையமைப்பாளராக பணியாற்றி வருகிறார். இப்படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். கடந்த மாதம் இப்படத்திலிருந்து முதல் பாடல் வெளியாகி பலரது கவனத்தை ஈர்த்தது. இந்த நிலையில் பிரிட்டன் இந்தியா நாடுகள் இணைந்து தயாரிக்கும் 'லயனஸ்' படத்திற்கு இசையமைப்பாளராக கதீஜா ஒப்பந்தமாகியுள்ளார். பிரிட்டிஷ் நடிகை பைஜ் சந்து மற்றும் அதிதி ராவ் நடிக்கும் இப்படத்தை பெண் இயக்குனர் கஜ்ரி பாபர் இயக்கவுள்ளார். இப்படத்தை இந்திய அரசின் தேசிய திரைப்பட வளர்ச்சி கழகமும், பிரிட்டனின் பிரிட்டிஷ் திரைப்பட கழகமும் இணைந்து தயாரிக்கவுள்ளனர் . இந்நிலையில், இந்த படத்தின் போஸ்டர் கோவாவில் நடந்து வரும் 54வது சர்வதேச திரைப்பட விழாவில் வெளியிடப்பட்டுள்ளது. இப்படம் மூலம் சர்வதேச அளவில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார் கதீஜா ரஹ்மான்.

# அயலான் படத்தால் சிவகார்த்திகேயனுக்கு கிடைக்கும் பெருமை


ஆர்.ரவிகுமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள திரைப்படம் 'அயலான்'. ஏ.ஆர் ரகுமான் இசையில், ரகுல் பிரீத் சிங், யோகி பாபு, கருணாகரன் உள்ளிட்ட பலர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தை 24 ஏ.எம். ஸ்டுடியோஸ் மற்றும் கே.ஜே.ஆர். ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்தின்டீசர்அண்மையில்வெளியாகிவரவேற்பை பெற்றது. இப்படம் பொங்கலுக்கு திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், 'அயலான்' திரைப்படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, சிவகார்த்திகேயன் நடித்து வெளியான படங்களிலேயே அதிகப்படியான நாடுகள் மற்றும் திரைகளில் வெளியாகவுள்ள திரைப்படம் 'அயலான்' தான் என படக்குழு போஸ்டரை வெளியிட்டு அறிவித்துள்ளது. இதன் மூலம் சிவகார்த்திகேயனுக்கு புதிய பெருமை கிடைத்துள்ளதாக ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.



# படப்பிடிப்பில் விபத்து.. நூலிழையில் உயிர் தப்பிய சூர்யா



இயக்குனர் சிவா இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷா பதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.


இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டி முறையில் சரித்திர படமாக உருவாகும் கங்குவா 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது. 'கங்குவா' திரைப்படத்தின்பர்ஸ்ட்லுக்போஸ்டர்மற்றும்மோஷன் போஸ்டரை படக்குழு வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்தது. இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 'கங்குவா' படத்தின் சண்டைக்காட்சிகள்சென்னைஈ.வி.பி.பிலிம்சிட்டியில் நடைபெற்று வந்தது. இந்த காட்சிகளை படமாக்குவதற்காக ரோப் கேமராக்கள் அமைக்கப்பட்டிருந்தது. அப்போது ரோப் கேமராவின் ஒரு பகுதி அறுந்து விழுந்தது. இதை பார்த்ததும் சக சண்டை பயிற்சியாளர்களும், ஸ்டண்ட் கலைஞர்களும் சத்தம் போட்டதையடுத்து சூர்யா அங்கிருந்து விலகினார்.

இந்த விபத்தில் சூர்யாவின் தோள் பட்டையில் லேசான காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து படப்பிடிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக நசரத் பேட்டை போலீசார் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



# டப்பிங் பணியை நிறைவு செய்த கபில் தேவ்.. எந்த படத்திற்கு தெரியுமா?



ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில்உருவாகி இருக்கும் திரைப்படம் 'லால் சலாம்'. கிரிக்கெட்டை மையமாக வைத்து உருவாகி இருக்கும் இந்ததிரைப்படத்தில்விக்ராந்த், விஷ்ணு விஷால் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.மேலும், நடிகர் ரஜினிகாந்த், முன்னாள்கிரிகெட் வீரர் கபில்தேவ் ஆகியோர் இதில் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர்.

இதில் ரஜினி மொய்தீன் பாய் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இப்படத்தின் இறுதி கட்ட போஸ்ட்புரொடக்ஷன்பணிகள்முழுவீச்சில்நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 'லால் சலாம்' படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, முன்னாள் கிரிகெட் வீரர் கபில்தேவ் இந்த படத்தின் டப்பிங் பணியை முடித்துள்ளார். இதனை படக்குழு புகைப்படத்தை பகிர்ந்து அறிவித்துள்ளது.



# ஒட்டகம் மேய்ப்பவராக யோகிபாபு

அருள் செழியன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் குய்கோ. இந்த படத்தில் விதார்த், யோகிபாபு, இளவரசு, ஸ்ரீபிரியங்கா, துர்கா, வினோதினி உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். ஒரு கிராமத்தில் மாடு மேய்ப்பவராக உள்ள யோகிபாபு ஒரு பெண்ணை காதல் செய்ய மாடு மேய்ப்பவனுக்கு பெண் தர மாட்டேன் என்று பெற்றோர் கூறி விட சவுதிக்கு சென்று ஒட்டகம் மேய்ப்பவராக அவரது கதாபாத்திரம் அமைந்துள்ளது.

இந்த படத்தின் டிரைலர் மற்றும் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. விழாவில் விதார்த், ஸ்ரீபிரியங்கா, இளவரசு, அந்தோணி தாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் யோகிபாபுவுக்கு ஜோடியாக நடிக்கும் துர்கா பேசியதாவது:


யோகிபாபு திரையில் பார்ப்பது போல் நேரிலும் சிரிச்சுட்டே, சிரிக்க வைத்துக்கொண்டே இருப்பார். இளவரசுஅவ்வளவு ஞானத்துடன்என்னிடம்பேசினார். அவரிடம் இருந்து நிறைய கற்றுக்கொண்டேன். இவ்வாறு அவர் பேசினார். ஏ.எஸ்.டி. பிலிம்ஸ் எல்.எல்.பி. நிறுவனம் தயாரிந்த இந்த படம் நாளை (24ந் தேதி) திரைக்கு வருகிறது.

# வேகமெடுக்கும் இந்தியன் 2 படப்பிடிப்பு

இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் தற்போது இந்தியன் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்து வருகிறார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு பல்வேறு கட்டங்களாக விறுவிறுப்பாக நடைபெற்று வந்த நிலையில் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.இப்படத்தின்அறிமுகவீடியோசமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, விஜயவாடா, விசாகப்பட்டினத்தில் 10 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வந்த 'இந்தியன் 2'படத்தின் படப்பிடிப்பு நேற்று நிறைவுபெற்றுள்ளது. மேலும், இன்று முதல் சென்னையில் படப்பிடிப்பு நடைபெறவுள்ளதாக கூறப்படுகிறது.



# சேரி மொழி வார்த்தைக்கு நெட்டிசன்கள் கண்டனம்: விளக்கம் அளித்த நடிகை குஷ்பூ



நடிகை த்ரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் நடிகர் மன்சூர் அலிகான் பேசியிருந்தார். இந்தப் பேச்சுக்குதிரைத்துறை மட்டுமின்றி பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனங்களும், எதிர்ப்புகளும் எழுந்துள்ளன.

மன்சூர் அலிகான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய மகளிர் ஆணையம் சார்பில் குஷ்பூ கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கிடையே, மணிப்பூர் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காதது ஏன் என தி.மு.க. ஆதரவாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, சேரி மொழியில் தன்னால் பேசமுடியாது என்று குஷ்பு பதிலளித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக நடிகை குஷ்பூவுக்கு சமூக வலைதளத்தில் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், சேரி மொழி என்று பயன்படுத்திய வார்த்தை சர்ச்சையான நிலையில், பாஜக நிர்வாகியும், தேசிய மகளிர் ஆணைய உறுப்பினருமான நடிகை குஷ்பூ விளக்கம் அளித்துள்ளார்.

அதில், பட்டியலின மக்களின் உரிமைகளுக்காக நான் எப்போதும் முன்னணியில் நிற்பேன். பிரெஞ்சு மொழியில் சேரி என்ற சொல்லுக்கு அன்பு என்பதே பொருள். அன்பு என்ற அர்த்தத்திலேயே சேரி என்ற சொல்லைப் பயன்படுத்தினேன் என விளக்கம் அளித்துள்ளார்.

# சஞ்சு சாம்சனை தேர்வு செய்யாதது ஏன்? தேர்வுக்குழு விளக்கம் அளிப்பது அவசியம் சசி தரூர்



இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் சஞ்சு சாம்சன். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர், அணியில் சேர்க்கப்பட்டதைவிட, புறக்கணிக்கப்பட்ட சம்பவம்தான் அதிகம்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய டி20 அணி அறிவிக்கப்பட்டது. ஐந்து போட்டிகள் கொண்ட இந்தத் தொடருக்கான அணியில் சீனியர் வீரர்கள் இடம் பெறாத நிலையில், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சூர்யகுமார் யாதவ் கேப்டனான நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் சஞ்சு சாம்சனை அணியில் எடுக்காதது குறித்து ரசிகர் ஒருவர், அவரின் சாதனையை குறிப்பிட்டு எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதை ஷேர் செய்து, அதற்கு பதில் அளித்த காங்கிரஸ் தலைவர் சசி தரூர்" இது உண்மையிலேயே விவரிக்க முடியாதது. சஞ்சு சாம்சனை அணியில் மட்டும் எடுத்திருக்கக் கூடாது. இந்திய அணியின் கேப்டனாக தேர்வு செய்திருக்க வேண்டும். சூர்யகுமாரை விட கேரள அணிக்கு, ராஜஸ்தான் அணிக்கு அவர் கேப்டனாக பணியாற்றி அனுபவம் அதிகம்.

கிரிக்கெட்டை விரும்பும் மக்களுக்கு தேர்வுக்குழு இதுகுறித்து விளக்கம் அளிப்பது அவசியம். மேலும், சாஹலை ஏன் தேர்வு செய்யவில்லை?" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# உலக கோப்பையை இந்தியா வெல்லாததால் மனமுடைந்தது: கபில் தேவ்



இந்திய அணியின் முன்னாள் கேப்டனும், ஆல் ரவுண்டராக ஜொலித்தவருமான கபில் தேவ் சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது:

உலக கோப்பை தொடர் முழுவதும் இந்திய அணி சிறப்பாக விளையாடியது. ஆனால் உலக கோப்பையை வெல்ல முடியாமல் போனதால் மனமுடைந்து விட்டது. இது மிகுந்த ஏமாற்றத்தையும் அளித்தது. இன்றைய கிரிக்கெட் வீரர்கள், மன்னிக்கவும் அவர்களால் உலக கோப்பையை வெல்ல முடியவில்லை. ஆனால் அவர்கள் நன்றாக விளையாடினார்கள். விளையாடும் முறை மிகவும் முக்கியமானது. இந்த நேரத்தில் நாம் புரிந்து கொள்ளாததை கற்றுக் கொள்வோம். ஒருநாள் போட்டியில் நான் ஒருமுறை பந்து வீசவில்லை. இதை நினைவில் வைத்து இருந்தால் நான் கிரிக்கெட் விளையாடி இருக்க மாட்டேன். நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இளைஞர்கள் நம்மை விட சிறந்தவர்கள். அவர்களை வழி நடத்த எங்களுக்கு அனுபவம் உள்ளது. அவர்களை சிறப்பாக வழிநடத்த இயலும். பள்ளி நாட்களில் இங்கு விளையாடும் போதெல்லாம் சிறப்பாக விளையாடிய நினைவுகள் இருக்கிறது. இதனால் சென்னை எனக்கு பிடித்த கிரிக்கெட் மைதானமாகும். இவ்வாறு கபில்தேவ் கூறினார். கபில் தேவ் தலைமையில் 1983ம் ஆண்டு இந்தியா முதல் முறையாக உலக கோப்பையை கைப்பற்றியது. அதன்பிறகு 28 ஆண்டுகளுக்கு பிறகு 2011ல் டோனி தலைமையில் 2வது முறையாக உலக கோப்பை கிடைத்தது. கபில் தேவ், டோனி வரிசையில் ரோகித்சர்மாவால் இணைய முடியவில்லை. அகமதாபாத்தில் நடந்த இறுதிப்போட்டியில் அவரது தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியாவிடம் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோற்று உலக கோப்பையை இழந்தது. உலக கோப்பை இறுதிப் போட்டியை பார்ப்பதற்கு நாட்டுக்கு பெருமை சேர்த்த கபில் தேவ், டோனிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# சர்வதேச பீடே செஸ் போட்டி தமிழக வீரர் ஆயுஷ் ரவிக்குமார் சாம்பியன்

மவுண்ட் செஸ் அகாடமி சார்பில் சீயோன்ஆல்வின் கல்வி குழுமம் சார்பில் 2வது சர்வதேச ஓபன் பீடே ரேட்டிங் செஸ் போட்டி சென்னையில் உள்ள சீயோன் பள்ளியில் நடைபெற்றது. இதில் 534 பேர் பங்கேற்றனர். அமெரிக்கா, கென்யா, கொரியா நாட்டில் இருந்தும் வீரர்கள் கலந்து கொண்டனர். போட்டி முடிவில் 6 வீரர்கள் 7 புள்ளிகளுடன் இருந்தனர். டை பிரேக்கர் முறையில் தமிழக வீரர் ஆயுஷ் ரவிக்குமார் சாம்பியன் பட்டம் பெற்றார்.

அவருக்கு ரூ.30 ஆயிரம் பரிசு தொகை கிடைத்தது. கோகுல் கிருஷ்ணா, ராமகிருஷ்ணன், ஹரிகணேஷ், யஷ்வந்த், ஆதித்யா ஆகியோர் 2 முதல் 6வது இடங்களை பிடித்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு சீயோன்ஆல்வி பள்ளி குழும தலைவர் என்.விஜயன் பரிசுகளை வழங்கினார். மொத்தம் ரூ.3 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.